IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.674/2013
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.40p.m.

வா.சா.1 சாட்சி பெரியவாசகன் த.பெ.கோவிந்தன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 12.03.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8ம்வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். 1ம்பிரதிவாதி எனது சகோதரரின் மனைவி என்றால் சரிதான். தமிழ்ச்செல்வி எனது சகோதரி என்றால் எனது மூத்தஅக்கா ஆவார். வழக்குச் சொத்து தமிழ்ச்செல்வியால் சொந்தமாக கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. தமிழ்ச்செல்வி வழக்குச் சொத்தை எனது தந்தைக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வழக்குச் சொத்தை எனது தந்தை கோவிந்தன் 1ம்பிரதிவாதிக்கு 10.02.2004ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி தமிழ்ச்செல்வி எந்த வருடம் வழக்குச் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் கிரையம் வாங்கினார் தேதி, வருடம் ஞாபகமில்லை.

3. மேற்படி தமிழ்ச்செல்வி எனது தந்தை கோவிந்தனுக்கு வழக்குச் சொத்தை எந்த வருடம் தானமாக கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்குச்சொத்தை எனது தந்தை அனுபவம் செய்து வந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தந்தை அனுபவம் செய்யவில்லை நாங்கள்தான் அனுபவம் செய்து வந்தோம். நாங்கள் அனுபவம் செய்துவந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. தாவாச்சொத்து சம்மந்தமாக மதுரை மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான்தான் வாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கு கடந்த 12.12.2018ல் வாதி தரப்பில் ஆஜர்இன்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி செல்வராணி என்மீது அ.வ.எண்.59/2009 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

5.மேற்படி வழக்கு கடந்த 8.11.2016ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.239/2011 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு கடந்த 14.7.2025ல் எனது ஆஜர்இன்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 3அசல் வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அது நிலுவையில் இருப்பதாக பொய்யாக கூறி நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. வழக்குச்சொத்தை 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு அதன் கிரையம் பெற்ற உரிமையாளர் என்ற முறையில் கிரையம் செய்துள்ளார் என்றால்

சரிதான். வழக்குச் சொத்தை 2ம்பிரதிவாதி கிரையம் பெறும்போது நீதிமன்றத்தில் தடைஉத்தரவு பெற்றேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து சம்மந்தமாக 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு செய்த கிரையம் செல்லாது என்றும் அதனை 2ம்பிரதிவாதி 3ம்நபருக்கு விற்பனை செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

7. தாவாச் சொத்தை 2ம்பிரதிவாதி வில்லங்கம் பார்த்துதான் வாங்கினார் என்றும் அதனால் அவர் பெற்ற கிரையம் செல்லும் என்றால் சரியல்ல. எனது தந்தை கோவிந்தன் தாவாச் சொத்தை பரம்பரைச் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு தமிழ்ச்செல்வி பெயரில் கிரையம் வாங்கினார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது செல்லாது என்று மட்டும் பரிகாரம் கோரியுள்ளேன், தமிழ்ச்செல்வி எனது தந்தை கோவிந்தனுக்கு எழுதிக்கொடுத்த தானப்பத்திரம் குறித்தும் கோவிந்தன் 1ம்பிரதிவாதி செல்வராணிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் குறித்தும் இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் பரிகாரம் எனதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

9. வழக்குச் சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையோ, பாத்தியமோ இல்லாத காரணத்தால் நான் தாவா வழக்கில் என்னைப் பொறுத்து தாவாச் சொத்தில் உரிமைகோரி பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை 2ம்பிரதிவாதி உரிய முறையில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

( சாட்சி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க தொடர்ந்து விரும்பாததால் சாட்சி விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது)

முடிவடையும் நேரம்:1.10 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.13 11:01:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.